# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.
Calendar )
Preliminary Register) CC.11/2024
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for ( Defence
( Court

| | | | |
|---|---|---|---|
| Name | T.S.Sajin | Caste | |
| Father's Name | Thangaraj | Calling | Deputy Director (BOCW) Industrial Safety and Health, Thirunelveli |
| Village | Kothanallur | Religion | Christian |
| Taluk | Kalkulam | Age | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of April 2024.

Accused absent. (Petition U/s.317 of Cr.P.C. filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது திருநெல்வேலி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநா் (BOCW) பொறுப்பாளராக பணிபுாிந்து வருகிறேன். கடந்த 01.05.2023 அன்று பிற்பகல் 01.30 மணியளவில் விருதுநகா் மாவட்டம், திருச்சுழி வட்டம், மேலேந்தல் கிராமம், சா்வே எண்.4/1, 4/4 என்ற முகவாியில் கட்டப்பட்டுவந்த அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூாி கட்டுமானத்தில் ஏற்பட்ட மரண விபத்து குறித்து ஆய்வு செய்தேன். ஆய்வின்போது இக்கட்டுமானது கட்டிடம் மற்றும் இதர கட்டுமான பணி தொழிலாளா்கள் ( பணி நிலைமைகள் மற்றும் பணி முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் எ எனது ஆய்வு நாளான 01.05.2023 வரை பதிவு செய்யப்படவில்லை) 01.05.2023 அன்றைய ஆய்வின்போது மரண விபத்து காரணமாக மேற்படி கட்டுமானத்தில் கட்டுமான பணி எதுவும் நடைபெறவில்லை. மரண விபத்து நடந்த 29.04.2023 அன்று 48 ஆண் தொழிலாளா்கள் மற்றும் 2 வளாிள பருவ ஆண் தொழிலாளா்கள் என மொத்தம் 50 தொழிலாள்கள் பணிபுாிந்து வந்தனா். ஆய்வின்போது kadal Constructions Project Manager Thiru.C.Satheesh உடனிருந்தாா். ஆய்வின்போது இக்கட்டுமானத்தின் சென்ட்ாிங் வேலை செய்த திரு.பாலமுருகன் என்பவாிடம் வாக்குமூலம் பெறப்பட்டது மற்றும் விபத்தின் காரணமாக முரண்பாடுகள் குறித்து புகைப்படம் எடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரா் நிறுவனத்தின் சாா்பாக kadal Constructions கட்டுமானத்தின் மேனேஜிங் பாா்ட்னா் திரு.பி.எஸ். பன்னீா் செல்வம் என்பவருக்கு கட்டிடம் மற்றும் இதர கட்டுமான பணி தொழிலாளா்கள் சட்டத்தின் கீழ் காணப்பட்ட 5 முரண்பாடுகளுக்கும், ஒப்பந்ததார தொழிலாளா் (முறைப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்) சட்டம் 1979 ன்கீழ் ஒரு முரண்பாடுக்கும் மற்றும் மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளா்கள் ( பணி நிலைமைகள் மற்றும் பணி முறைப்படுத்துதல் சட்டம் 1979 ன் கீழ்) ஒரு முரண்பாடும் என மொத்தம் 7 முரண்பாடுகள் காணப்பட்டன. மேற்கண்ட முரண்பாடுகள் குறித்து ஆய்வறிக்கை தயாா் செய்தேன். ஆய்வறிக்கையின் அடிப்படையில் ஒப்பந்தாரா் திரு.பி.எஸ். பன்னீா் செல்வம்

அவா்களுக்கு காரணம் கோரும் அறிவிப்பை தயாா் செய்து பதிவு தபாலில் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பி வைத்தேன். ஒப்பந்தாரா் திரு.பி.எஸ். பன்னீா் செல்வம் அவா்கள் காரணம் கோரும் அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை பெறப்பட்டது. காரணம் கோரும் அறிவிப்பிற்கு ஒப்பந்ததாரா் திரு.பி.எஸ். பன்னீா் செல்வம் என்பவாிடமிருந்து இணைப்புகளுடன் பதில் கடிதம் பெறப்பட்டது.

பதிலின் அடிப்படையில் சாி செய்யப்படாத முரண்பாடுகளுக்கு Kada Constructions ஒப்பந்தாரா் திரு.பி.எஸ்.பன்னீா் செல்வம் அவா்கள் மீது வழக்கு தொடர சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனா் அவா்களுக்கு வழக்கு முன்மொழிவு பிரேரனை அனுப்பினேன். திரு.பி.எஸ்.பன்னீா் செல்வம் அவா்களுக்கு சாிசெய்யப்படாத முரண்பாடுகள் தொடா்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஒரு அறிவிப்பு கடிதத்தை அனுப்பினேன். மேலும் எனது வழக்கு முன்மொழிவு பிரேரணை பெயாில் சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனா் அவா்கள் Kadal Constructions ஒப்பந்ததாரா் திரு.பி.எஸ். பன்னீா் செல்வம் மீது வழக்கு தொடர அனுமதி அளித்து குற்ற முறையீட்டினை தலைமை குற்றவியல் நடுவா் நீதிமன்றம், திருவில்லிபுத்தூாில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு பெறப்பட்ட குறிப்பாணையின் அடிப்படையில் குற்ற முறையீடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. சாிசெய்யப்படாத இரண்டு முரண்பாடுகளில் கட்டிடம் மற்றும் இதர கட்டுமான பணி தொழிலாளா்கள் ( பணி நிலைமைகள் மற்றும் பணி முறைப்படுத்துதல் சட்டம்) 1996 ல்

1. முரண்பாடு 1 பிாிவு 44 விதி 183(b) படி வேலை அளிப்பவா் தொழிலாளா்களுக்கு பாதுகாப்பு மற்றும் விபத்து தடுப்பு முறைகளுக்கான போதுமான மற்றும் தொடா்ச்சியான அமைப்பை ஏற்படுத்த வேண்டும். மேலும் Form work அகற்றும் பணியின்போது பணியின் தன்மை, அபாயகரமான சூழ்நிலைகளை ஆய்வு செய்து அவற்றை சாி செய்ய ஒரு பொறுப்பான நபரை மேற்பாா்வை செய்ய வேலை அளிப்பவா் பணிக்கு அமா்த்தப்படவேண்டும். ஆனால் விருதுநகா் மாவட்டம்., திருச்சுழி வட்டம், மேலேந்திர கிராமத்தில் சா்வே எண்.4/1, 4/4 என்ற முகவாியில் கட்டப்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூாியல் கட்டுமானத்தின் ஒப்பந்தாரா் கட்டுமான தொழிலாளா்களுக்கு பாதுகாப்பு மற்றும் விபதது தடுப்பு முறைகளுக்கு போதுமான மற்றும் தொடா்ச்சியான மேற்பாா்வை அமைக்கப்படாததால் 29.04.2023 முற்பகல் 11.00 மணியளவில் கட்டிடத்தின் முதல் தளத்தில் கான்கீாிட் பில்லா்க்கு பயன்படுத்திய sheet Metal column Box (L Column Box) அகற்றும்போது Earthing செய்யப்படாமல் பயன்படுத்தப்பட்ட உட்கட்டிங் இயந்திரத்தின் ஒயாில் sheet Metal column Box விழுந்ததில் உட்கட்டிங் இயந்திரத்தின் ஒயா் இரண்டாக பிய்ந்து அதன் வழியாக மின்சாரம் பாய்ந்து அங்கு Helper ராக பணிபுாிந்த செல்வன்.Harish Kumar. Age–15, S/o. Ramesh, மற்றும் செல்வன். ரவிசெல்வம், வயது–17, த/பெ.கருப்பசாமி ஆகிய இருவரும் மரணமடைந்தனா். இதே கட்டிடம் மற்றும் இதர கட்டுமான பணி தொழிலாளாகள் (பணி நிலைமைகள் மற்றும் பணி முறைப்படுத்துதல்) சட்டம் பிாிவு 50(1) ன் கீழ் கண்டிக்கதக்க குற்றமாகும்.

2. பிாிவு 40(1) (2) (n) விதி 47 (1)(4)(5)(6) படி கட்டுமான பணி நடைபெறும் இடங்களில் live Electrical Wires அல்லது Electrical Machinery மற்றும் அதன் உதிாி பாகங்கள் மற்றும் over head wire ஆகியவற்றின் மின் ஆபத்தை தடுக்கவும் தொழிலாளா்களின் பாதுகாப்பை வேலை அளிப்பவா் உறுதி செய்ய வேண்டும். மேலும் கட்டுமான பணி நடைபெறும் இடங்களில் மின்சார ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய Electrical

equipment or apparatus, Machinery அல்லது Live electrical wires ஆகியவற்றின் மின் ஆபத்தை தடுக்க வேலை அளிப்பவா் உறுதி செய்யவேண்டும். மேலும் கட்டுமான பணியிடத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து Electrical Appliances மற்றும் Current carrying Equipments முறையாக எா்த்திங் செய்யப்படவேண்டும். மேலும் கட்டுமான பணியிடத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து க Temporary Electrical Installation களும் earth Leakage circuit Breakers உடன் இணைக்கப்படவேண்டும். ஆனால் மேற்படி கட்டுமானத்தில் 29.04.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் கட்டுமானத்தின் மேற்கு பகுதியில் முதல் தளத்தில் கான்கிரிட் பில்லா்க்கு பயன்படுத்திய 8 அடி உயரமுள்ள Sheet Metal Column Box (ட Column Box) திரு.ராஜா மற்றும் திரு. பாண்டி ஆகிய இருவரும் அகற்றுவதற்கு ஸிபனா் எண்.18 மற்றும் 19 ஆகியவை பயன்படுத்தி Sheet Metal Column Box ன் Nut யை வெளியே எடுத்தபொழுது முதல் தளத்தின் தரைப்பகுதி Earthing செய்யப்படாமல் பயன்படுத்தப்பட்ட உட்கட்டிங் இயந்திரத்தின் ஒயாில் Sheet Metal Column Box விழுந்ததில் உட்கட்டிங் இயந்திரத்தின் ஒயா் இரண்டாக பிய்ந்து பாதுகாப்பு உபகரணம் (Safety Helmet, Safety Shoes and Safety gloves) ஏதும் வழங்கப்படாத நிலையில் Sheet Metal Column Box அகற்றுவதற்கு Helper ராக பணிபுாிந்த செல்வன்.Harish Kumar. Age–15, S/o. Ramesh, மற்றும் செல்வன். ரவிசெல்வம், வயது–17, த/பெ.கருப்பசாமி ஆகிய இருா் மீதும் மின்சாரம் பாய்ந்த நிலையில் உட்கட்டிங் இயந்திரத்தின் எலக்ட்ாிக்கல் சப்ளை துண்டித்த பின் செல்வன்.Harish Kumar. மற்றும் செல்வன். ரவிசெல்வம், ஆகிய இருவரையும் முதல் தளத்தில் தரையில் படுக்க வைத்து திரு. திலீப் என்பவா் முதலுதவி சிகிச்சை அளித்த பின் செல்வன்.Harish Kumar. மற்றும் செல்வன். ரவிசெல்வம், ஆகிய இருவரையும் நாிக்குடி அரசு மருத்துவமனை அழைத்து சென்றதாக எனது ஆய்வின்போது பாலமுருகன் என்பவரது வாக்குமூலத்திலிருந்து தொியவந்தது. நாிக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையின்போது செல்வன்.Harish Kumar மரணமடைந்ததா். பின்னா் 108 ஆம்புலன்ஸ் மூலமாக செல்வன். ரவிசெல்வத்தை திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்து சென்றபோது மரணமடைந்தா். செல்வன். Harish Kumar. மற்றும் செல்வன். ரவிசெல்வம், ஆகிய இருவாின் உடல் பிரேத பாிசோதனை முடித்து உறவினாிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டுமானத்தில் உட்கட்டிங்க இயந்திரம் முறையாக எா்த்திங் செய்யப்படாததாலும் தொழிலாளா்களுக்கு பாதுகாப்பு உபகரணம் (Safety shoes and safety gloves) எதும் வழங்கப்படாததாலும் பாதுகாப்பு நடைமுறைகளை ஒப்பந்ததாரா் கடைப்பிடிக்காததாலும் மேற்படி விபத்தில் Harish Kumar மற்றும் செல்வன். ரவிசெல்வம், ஆகிய இருவரும் மரணமடைந்துள்ளனா் எனது ஆய்வின்போது தொியவந்தது. எனது ஆய்வில் கட்டிட கட்டுமான பணி நடந்த இடத்தில் தொழிலாளா் பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் காணப்படவில்லை.

எனவே, கட்டிடம் இதர கட்டுமான பணி தொழிலாளா்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள் ) சட்டம் பிாிவு 47(1)ன் படி கண்டிக்கதக்க குற்றமாகும். இது சம்பந்தமாக நான் கடந்த 24.07.2024 ம் தேதி குற்ற முறையீட்டு மனு தயாா் செய்து தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் குற்ற முறையீட்டு மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். குற்ற முறையீட்டு மனுவுடன் இந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

ஆய்வறிக்கை நகல் **அதசாஆ 1** ஆகவும், Kadal Constructions ஒப்பந்ததாரா் திரு.பி.எஸ்.பன்னீா் செல்வம் மீது வழங்கப்பட்ட காரணம்

கோரும் அறிவிப்பு பதிவு அஞ்சல் ரசீதுவுடன் கூடியது. அசல் **அதசாஆ 2** ஆகவும், காரணம் கோரும் அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **அதசாஆ 3** ஆகவும், விரிவான புலனாய்வு அறிக்கை நகல் **அதசாஆ 4** ஆகவும், திரு.பாலமுருகன் என்பவாின் வாக்குமூலம் நகல் **அதசாஆ 5** ஆகவும், காவல் துறை முதல் தகவல் அறிக்கை நகல் **அதசாஆ 6** ஆகவும், புகைப்படம் எண்ணிக்கை 5 அசல் **அதசாஆ 7** ஆகவும், விபத்து தொடா்பாக தொழிலாளா்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து விருதுநகா் தொழிலாளா் உதவி ஆணையா்( SSS) க்கு அனுப்பிய கடித நகல் **அதசாஆ 8** ஆகவும், வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோாி மதுரை தொழிலாளா் இணை ஆணையா்க்கு அனுப்பிய கடிதம் **அதசாஆ 9** ஆகவும், விருதுநகா் மாவட்ட சட்ட பணிகள் ஆணையத்திடம் தொழிலாளி செல்வன்Harish Kumar and Selvan. Ravi Selvam ஆகியோா் குடும்பத்தாருக்கு Kadal Constructions சாா்பாக தலா ரூ.15,00,000/- வீதம் மொத்தம் ரூ.30,00,000/- (interim Compensation) கக்கான செலுத்தப்பட்டதற்கான நகல் **அதசாஆ 10** ஆகவும், மரணமடைந்த செல்வன் Harish Kumar பிரேத பாிசோதனை நகல் **அதசாஆ 11,** மரணமடைந்த செல்வன் ரவிசெல்வம் பிரேத பாிசோதனை நகல் **அதசாஆ 12**, Kadal Constructions ஒப்பந்ததாரா் திரு.பி.எஸ்.பன்னீா் செல்வம் அவா்களின் பதில் கடிதம் அசல் **அதசாஆ 13,** திருத்தச்சீட்டு எண்ணிக்கை 1 அசல் **அதசாஆ 14**, Kadal Constructions ஒப்பந்ததாரா் திரு.பி.எஸ்.பன்னீா் செல்வம் மீது வழக்கு தொடா்வது குறித்து அனுப்பப்பட்ட கடிதம் அசல் **அதசாஆ 15**, திருநெல்வேலி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குனா் (BOCW) பொறுப்பு அவா்களின் வழக்கு முன்மொழிவு பிரேரனை அசல் **அதசாஆ 16**, வழக்கு தொடர அனுமதி வழங்கிய சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனா் அவா்களின் குறிப்பாணை எண்.L1/11245/2023-2 நாள் 20.07.2023 மேற்படி அசல் **அதசாஆ 17** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி இரண்டு முரண்பாடுகளுக்கும் எதிாிக்கு உாிய தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of April 2024.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**